**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12 ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது. பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜாஹிர் உசேன் | தந்தையின் பெயர்: | |
| ஜாதி : | | கிராமம் : | |
| தொழில்: | | வயது: | |

12.04.2023
EA 2/21 in EP 58/2021 in ACPTF 84/2016
PW1

வாதி தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. ஆவணப்பட்டியல் படி மசாஆ 1 முதல் மசாஆ 3 வரை குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

17.07.2023
EA 2/21 in EP 58/2021 in ACPTF 84/2016
PW1 – ஜாஹிர் உசேன்

மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் பி.ஏ., Economics படித்துள்ளேன். வாதி நிறுவனத்தில் கடன் பெற்றுள்ளேன். வியாபாரத்திற்காக கடன் பெற்றேன். என் அப்பா பெயர் அப்துல் ரஜாக். என் அப்பா கடன் பெற்றிருந்தார். நான் ஜாமீன்தாரராக கையொப்பம் செய்தேன். என் அப்பா பெயரில் வாங்கப்பட்ட கடன். என் அப்பா 23.12.2012ம் தேதி இறந்துவிட்டார். என் அப்பா பெயரில் சொத்து இருந்ததால் என் தந்தைக்கு கடன் கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 01.02.2016 தேதியிட்ட அறிவிப்பு அப்துல் ரஜாக்கிற்கு அனுப்பப்பட்டபோது ஒப்புதல் அட்டையில் நான் கையொப்பமிட்டு பெற்றுள்ளேன். மேற்படி ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒரு நபர் இறந்த பிறகு அவருக்கு அனுப்பப்படும் அறிவிப்பை மற்றவர் வாங்கக்கூடாது, இறந்துவிட்டார் என்ற தகவலை மட்டும் தெரிவித்து அனுப்பவேண்டும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

02.11.2023
EA 2/21 in EP 58/2021 in ACPTF 84/2016
PW1 – ஜாஹிர் உசேன்

மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரி. எனது தகப்பனாரும் மேற்படி முகவரியில் தான் அவர் இறக்கும் வரை வாழ்ந்து வந்தார் என்றால் சரி. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தோல் மற்றும் இரும்பு வியாபாரம் கடந்த 30 ஆண்டுகளாக செய்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 1ல் எனது தகப்பனார் காலம் சென்றதை விசாரணை செய்த காலத்திலேயே இசைவு தீர்வாளருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்தேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மசாஆ1 02.03.2019 ம் தேதியிட்ட கடிதத்தில் எனது வழக்கின் நடவடிக்கை பற்றிய விவரங்கள் என்னவாகியது என்று எனக்கு தெரியப்படுத்த வேண்டி இந்த கடித்தத்தை அனுப்பி உள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஏற்கனவே எங்களால் செலுத்தப்பட்ட தொகையை கணக்கிடப்படாமல் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன், அந்த பணத்தை நானும் என் தகப்பனாரும் தான் செலுத்தினோம். என் உடன் பிறந்தவர்கள் 8 நபர்கள் ஆவார்கள். அவர்களது பெயர்கள் ஜாஹிர் உசேன், அபுபக்கர், சிராஜுதீன், உஸ்மான் ஹபீப், அலியார், மெகராஜ் பேகம், மெகரு நிஷா, பஜனுன் பேகம் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி நபர்பகளின் பெயர்களை எனது தகப்பனாரின் வாரிசுகள் என்று எனது மனுவில் கூறி உள்ளேனா என்றால் கூறி உள்ளேன். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள குறிப்பாணையில் வாரிசு தாரர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தவறு. 13.04.2016ம் தேதியிட்ட அஞ்சல அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், அது **எமசாஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எமசாஆ 2 ல் ACP Number 84/2016 and Hearing date 28.04.2016

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு தான் கண்டுள்ளது, நான் அவற்றை கவனிக்கவில்லை. Loan Agreement No. THIRBTF06090004 dated 31.05.2011 என்பதில் நான் borrower என் தந்தை co–borrower என்றால் என் அப்பா கடன் வாங்கினார் நானும் உடன் கையொப்பம் செய்தேன். எனது அப்பாவிற்கு வந்த அறிவிப்பை நான் கையொப்பம் செய்து பெற்றுக்கொண்டு எனது தகப்பனாரின் இறப்பை வேண்டுமென்றே தெரியப்படுத்தாமல் தவிர்க்கவே 01.01.2016 ம் எமசாஆ 2 யை பெற்றுள்ளேன் என்றால் தவறு. நான் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாமல் காலம் கடத்தவே EA 2/21 தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. இசைவு தீர்ப்பாளரின் தீர்ப்பாணைக்கு பின் மாவட்ட நீதிமன்றத்தில் நாளது தேதி வரை நான் எவ்வித மேல் முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் தவறு.